# பேச்சும் வாய்மொழித் தொடர்பாடலும்

## போட்டி விதிமுறைகளும் வழிகாட்டல்களும்

# Speech and Verbal

## Competition Rules and Guidelines

# 2020

**வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்**

**Wentworthville Tamil Study Centre Inc**

www.wtsc.org.au

Revision: April 2024

## பேச்சும் வாய்மொழித் தொடர்பாடலும் போட்டி

### 1. படிநிலை 1 முதல் படிநிலை 4 வரை: ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 9 வரை

மாணவர்களின் தமிழில் உரையாடும் திறனை ஊக்குவிக்கும் முகமாக பேச்சுப் போட்டியுடன் வாய்மொழித் தொடர்பாடல் போட்டி இணைக்கப்பட்டுள்ளது. இப் போட்டிகளுக்கான புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. இப் போட்டிகளில் மாணவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி பேச அழைக்கப்படுவார்கள். பேச்சுப் போட்டி முடிவடைந்தவுடன் மாணவர்களுக்கான வாய்மொழித் தொடர்பாடல் போட்டி இடம் பெறும்.

#### பேச்சுப் போட்டி விதிமுறைகள்:

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம் பேசுவதற்காக கொடுக்கப்படும்.
2. மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பேச்சுப்போட்டியில் பேசும்பொழுது குறிப்பிடக்கூடாது.
3. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவர் நடுவர்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசுதல்வேண்டும்.
4. பேச்சுப் போட்டியில் கொடுக்கப்பட்ட விடயங்களுக்கு (அவை வணக்கம் உட்பட) மேலாக எதையும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளக் கூடாது.
5. பேசும்பொழுது தடங்கல் ஏற்பட்டால் உதவி செய்யப்படும். ஆனால் இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
6. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்குமுன் பாடசாலைக்குச் சமுகம் அளிகக் வேண்டும்.

#### வாய்மொழித் தொடர்பாடல் போட்டி விதிமுறைகள்:

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாய்மொழித் தொடரப்பாடல் போட்டியில் கேட்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் போட்டி ஆரம்பிக்க முன் பாடசாலைக்குச் சமுகம் அளிக வேண்டும்.
3. வாய்மொழித் தொடர்பாடல் போட்ட்யில் மாணவர்களின் தமிழில் உரையாடும் (பேச்சுத் தமிழ்) திறன் மதிப்பிடப்படும்.
4. மாணவர்களின் தமிழில் உரையாடும் திறனை மதிப்பிடுவதற்கான பொதுவான வினாக்கள் கேட்கப்படும். ஆண்டு 5ம் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கும் பேச்சுப் போட்டியிற் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்து 3 கேள்விகள் கேட்கப்படும்.
5. மாணவர்களின் தமிழ்ச் சொற் பயன்பாடு தமிழ் மொழியை அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் திறன் கூச்சமின்றிப் பேசும் தன்மை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்.
6. போட்டிகளுக்கான மதிப்பீட்டுப் புள்ளிகள் கீழேயுள்ள அட்டவணையில் குறிபப்பிட்டவாறு கணிக்கப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | படிநிலை 1 | படிநிலை 2 | படிநிலை 3 | படிநிலை 4 |
|---|---|---|---|---|
| | ஆரம்பப்பள்ளி | ஆண்டு 1 முதல் ஆண்டு 3 வரை இணைப்பு வகுப்பு | ஆண்டு 4 முதல் ஆண்டு 6 வரை ஆண்டு 5-7 நாவலர் புகுநிலை வகுப்பு | ஆண்டு 7 முதல் ஆண்டு 9 வரை ஆண்டு 8-10 விபுலானந்தர் |
| **பேச்சுப் போட்டிக்கான நடுவர்களின் மதிப்பீடு** | **80 புள்ளிகள்** | **70 புள்ளிகள்** | **65 புள்ளிகள்** | **60 புள்ளிகள்** |
| ➢ மேடை மரபு | 5 புள்ளிகள் | 5 புள்ளிகள் | 5 புள்ளிகள் | 5 புள்ளிகள் |
| ➢ தெளிவான, சரியான உச்சரிப்பு | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் |
| ➢ பொருள் விளங்கச் சுவைபடப் பேசுதல் | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் | 20 புள்ளிகள் |
| ➢ பிழை விடாது பேசுதல் | 35 புள்ளிகள் | 25 புள்ளிகள் | 20 புள்ளிகள் | 15 புள்ளிகள் |
| **வாய்மொழித் தொடர்பாடலுக்கான மதிப்பீடு** | **20 புள்ளிகள்** | **30 புள்ளிகள்** | **35 புள்ளிகள்** | **40 புள்ளிகள்** |

2. **படிநிலை 5: ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC வரை**

போட்டி விதிமுறைகள்:

1. மாணவர்கள் எல்லோரும் அந்த வருட கருப்பொருளை மையமாக வைத்து தங்கள் பேச்சை ஆயத்தம் செய்தல் வேண்டும்.
2. மாணவர்கள் தரப்பட்ட கருப்பொருள் சார்ந்து உபதலைப்புகளையும் தெரிவு செய்யலாம். போட்டிக்கு முதல் கிழமை தமது பேச்சின் இறுதிப் பிரதியொன்றை உப அதிபரிடம் கொடுக்கவேண்டும்.
3. மாணவர்களின் பேச்சிற்கான நேரம் 3 முதல் 5 நிமிடங்கள் ஆகும். பேச்சானது 3 நிமிடத்திற்கு குறைவாகவோ அல்லது 5 நிமிடங்களிற்கு கூடவாகவோ இருப்பின் புள்ளிகள் குறைக்கப்படும்.
4. போட்டியாளர்களுக்கான வாய்மொழித் தொடர்பாடல் (interview) போட்டி நடைபெறும் தினத்தில் மாணவர் பேசி முடித்தபின்னர் (மேடையில் நிற்கும்போதே) நடைபெறும்.
5. வாய்மொழித் தொடர்பாடலின்போது, ஒவ்வொரு நடுவராலும் தலா ஒவ்வொரு கேள்வி கேட்கப்படும்.
6. போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். மாணவர்களுக்கு அடையாள இலக்கங்கள் கொடுக்கப்பட்டு அதன்படி அழைக்கப்படுவார்கள்.
7. போட்டி ஆரம்பிப்பதற்கு அரைமணி நேரத்திற்கு முன்னதாக பாடசாலைக்கு வந்து அடையாள இலக்கங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
8. மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பேச்சுப் போட்டியில் பேசும்பொழுது சொல்லக்கூடாது.
9. இலக்கம் அழைக்கப்பட்டதும் அதற்குரிய மாணவர் நடுவர்கள் முன்னிலையில் தமக்குரிய விடயத்தைப் பேசிக்காட்ட வேண்டும்.
10. மாணவர்கள் சிறிய அட்டைகளில் (குறுவட்டைகளில்) பேச்சைச் சுருக்கமான வகையில் எழுதி இடையிடையே பார்த்துப் பேசமுடியும். மாணவர்கள் தாம் எழுதிய பேச்சை அதே வகையில் ஒப்புவிக்கத் தேவையில்லை. பேச்சிலுள்ள விடயங்களை உள்ளடக்கிப் பேசுதல் போதுமானதாகும்.

11. போட்டி மதிப்பீட்டுப் புள்ளி விபரம்:

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC |
|---|---|
| **மேடைப் பேச்சு - நடுவர்களின் மதிப்பீடு** | **80 புள்ளிகள்** |
| ➢ மேடை மரபு | 20 புள்ளிகள் |
| ➢ இலக்கணமும் உச்சரிப்பும் | 30 புள்ளிகள் |
| ➢ பேச்சுத் திறன் (உள்ளடக்கம் 10, பொருள் உணர்ந்து பேசுதல் 20) | 30 புள்ளிகள் |
| வாய்மொழித் தொடர்பாடல் - **நடுவர்களின் மதிப்பீடு** | **20 புள்ளிகள்** |

➢ **மேடை மரபு**

- மேடைக்குச் செல்லும் போதும் வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல்.
- குறுவட்டைகளை (சிறிய அட்டைகளை) ஒரு வழிகாட்டியாக மட்டும் பாவித்தல், குறுவட்டைகளைப் பார்த்து தொடர்ச்சியாக வாசித்தலுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- சபையை ஈர்க்கும் வகையில் அனைவரையும் பார்த்துப் பேசுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் நன்று).
- அளவுக்கதிகமான உடல் அசைவுகள் சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள போன்றவற்றைத் தவிர்ப்பது நன்று.

- **இலக்கணமும் உச்சரிப்பும்**
    - வசனங்கள் முழுமையானவையாகவும் இலக்கணப் பிழையற்றவையாகவும் இருத்தல்.
    - பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயனப்டுத்துதல்.
    - தூய, தெளிவான, சரியான தமிழ் உச்சரிப்பு.
    - முக்கிய எழுத்து வேறுபாடுகளை அறிந்து பேசுதல்.
    - பொருத்தமான முறையிற் சொற்களைப் பிரித்தல், சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்).

- **பேச்சுத் திறன்** (உள்ளடக்கமும் பொருள் உணர்ந்து பேசுதலும்).
    - பேச்சானது தலைப்பை விளக்கும் வகையில் உரிய கருத்துக்களைக் கொண்டதாக இருத்தல்.
    - கருத்துக்களின் தெரிவும் ஒழுங்கும்.
    - பேச்சில் தலைப்புடன் தொடர்புடைய பொருத்தமான மேற்கோள்களை சரியான வகையிற் பயன்படுத்துதல். (திருக்குறள், பழமொழிகள் போன்றவை).
    - சரளமான ஆற்றொழுக்கான பேச்சு. வசனங்களைத் தகுந்த உணர்வுடன் பேசவேண்டும்.
    - உணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு முகபாவனைகள் காட்டுதல். பேச்சின் பொருளை அனுபவித்து, இரசித்துப் பங்கு கொள்ளும் தன்மை. ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்.
    - தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல். மிக வேகமாகவோ மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.
    - சபையோரின் கவனத்தை ஈர்த்தல்.
    - தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றைத் தவிர்த்தல்.
    - வினா வியப்பிசைக்குறி வரும் இடங்களைத் தகுந்தவாறு கையாளுதல் (உதாரணம் "அது எங்கே?" என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)

**வாய்மொழித் தொடர்பாடல்**

மாணவர்கள் தெரிந்தெடுத்த தலைப்பிலிருந்தும், அவர்களது பேச்சிலிருந்தும் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

- உரையாடும் திறன்: கூச்சமின்றி நடுவர்களைப் பார்த்து, சரளமாக உரையாடும் தன்மை, தன்னம்பிக்கையுடன் உரையாடுதல். உரையாடலை இரசித்து ஆர்வமாக பங்குகொள்ளும் தன்மை.
- மொழிப் பிரயோகம்: சொற்களின் பொருளைச் சரியாக விளங்கிக் கொண்டு பதில்களில் உபயோகித்தல், தெளிவான, இலக்கண வழுவற்ற வசனங்களில் உரையாடுதல்.
- பொருள் உணர்ந்து உரையாடுதல்: பேச்சுத் தலைப்பை விளங்கிக் கொண்டமையை, கேட்கப்படும் வினாக்களுக்குத் தயாரித்த பேச்சிலிருந்தும், வேறு அனுபவங்களையும் மேற்கோள் காட்டி திருப்தியான பதில் அளிக்கும் திறன்.

## 3. பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

- ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% இற்கு தரப்படுத்தப்பட்டு (standardised) அதிலிருந்து மற்றைய மாணவர்களின் புள்ளிகள் அதற்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டு தரம் பிரிக்கப்படும். 35 புள்ளிகளிற்கு மேல் எடுத்தவர்கள் மாத்திரமே பரிசில்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களாவர்.
- போட்டிக்கான பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வகுப்பிலும் போட்டியில் பங்குபற்றி 35 இற்கு மேல் புள்ளிகள் எடுத்த மாணவர்களின் புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு கீழ் தரப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு பரிசில்கள் வழங்கப்படும்.

**ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 9 HSC வரை:**

| | |
|---|---|
| • 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள்<br>• குறைந்தபட்சம் முதல் 20% மாணவர்கள் | முதலாம் பிரிவு |
| • 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (90 புள்ளிகளுக்குக் கீழ்)<br>• குறைந்தபட்சம் முதல் 40% மாணவர்களுள் இருக்கவேண்டும் | இரண்டாம் பிரிவு |
| • 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (80 புள்ளிகளுக்குக் கீழ்)<br>• குறைந்தபட்சம் முதல் 60% மாணவர்களுள் இருக்கவேண்டும் | மூன்றாம் பிரிவு |
| 35 அல்லது 35 புள்ளிக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |

போட்டிகளில் பங்குபற்றி **35** புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் போட்டியில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**ஆண்டு 10 HSC, ஆண்டு 11 HSC மற்றும் ஆண்டு 12 HSC:**

| | |
|---|---|
| 85 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் | முதலாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (85 புள்ளிகளுக்குக் கீழ்) | இரண்டாம் பிரிவு |
| • 60 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (70 புள்ளிகளுக்குக் கீழ்)<br>• குறைந்தபட்சம் முதல் 60% மாணவர்களுள் இருக்கவேண்டும் | மூன்றாம் பிரிவு |
| 50 புள்ளிகளுக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |

போட்டிகளில் பங்குபற்றி 50 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்குப் போட்டியில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## 4. **போட்டி முடிவுகள்:**

பேச்சுப் போட்டி முடிவுகள் அனைத்துப் போட்டிகளும் முடிவடைந்து இரண்டு வாரங்களின் பின் அனைத்துப் போட்டி முடிவுகளும் ஒன்றாக பாடசாலை நாளில் வழங்கப்படும்.